| திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம் | | |
|---|---|---|
| அம்மா கட்டுரைகள் | | |
| **வரிசை எண்** | **தலைப்பு** | **போர்டு எண்ணிக்கை** |
| **1** | இது அனைத்து அம்மாக்களுக்கும் சமர்ப்பணம் | 2 |
| **2** | Poor Mother Proud Children | 2 |
| **3** | Mother's Hands | 2 |
| **4** | மாமியாரும் ஒரு அம்மா தானே | 2 |
| **5** | இன்று நீங்கள் இல்லையே அம்மா | 2 |
| **6** | அம்மா என்றாலே தியாகம் தான் | 2 |
| **7** | அம்மா உன்னை நேசிக்கிறேன் அம்மாவின் கைகள் | 2 |
| **8** | அம்மாவின் கைகள் | 6 |
| **போர்டு எண்ணிக்கை மொத்தம்** | | 20 |

# இது அனைத்து அம்மாக்களுக்கும் சமர்ப்பணம்.!

அப்பா கட்டிய வீடாயிருந்தாலும்
அது நமக்கு அம்மா வீடுதான்..!
*****

அடுப்படியே அம்மாவின் அலுவலகம்..!
அன்பு மட்டுமே எதிர்பார்க்கும் சம்பளம்..!
*****

காய்ச்சல் வந்தால் மருந்து தேவையில்லை..!
அடிக்கடி வந்து தொட்டுப்பார்க்கும்
அம்மாவின் கையே போதுமானது..!
*****

இவ்வளவு வயதாகியும் புதுச்சட்டைக்கு மஞ்சள்
வைத்து வருபவனை கேலி செய்யும் நண்பர்களே..
அது, அவன் வைத்த மஞ்சள் அல்ல..
அவன் அம்மா வைத்த மஞ்சள்..!
*****

டைஃபாயிடு வந்து படுத்த அம்மாவுக்கு
'சமைக்க முடியவில்லையே'
என்கிற கவலை..!
*****

'அம்மா தாயே'
என்று முதன்முதலில் பிச்சை கேட்டவன்
உளவியல் மேதைகளுக்கெல்லாம் ஆசான்..!
*****

எந்தப் பொய் சொல்லியும்
அம்மாக்களை ஏமாற்றவிட முடியும்..
'சாப்பிட்டு விட்டேன்' என்கிற
அந்த ஒரு பொய்யைத் தவிர!
*****

அம்மாவுடனான சண்டையை
முடிவுக்குக் கொண்டுவர
'பசிக்குதும்மா...'
என்ற ஒரு வார்த்தை போதுமானது...!
*****

அத்தி பூத்தாற்போல அப்பனும் மகனும்
பேசிச் சிரித்தால் விழாத தூசிக்கு
கண்களை தேய்த்துக்கொண்டே
நகர்ந்து விடுகிறார்கள் அம்மாக்கள்..!
*****
வெளியூர் செல்லும் பிள்ளைகளின்
பயணப்பைக்குள் பிரியங்களைத்
திணித்து வைப்பவர்கள் அம்மாக்கள்..!
*****

பீஸ் கட்ட பணமென்றால் பிள்ளைகள்
அம்மாவைத்தான் நாடுகின்றன..
காரணம், எப்படியும் வாங்கிக்கொடுத்து
விடுவாள்! அல்லது எடுத்துக்கொடுத்து
விட்டு திட்டு வாங்கிக் கொள்வாள்..!
*****

வீட்டுக்குள் அப்பாவும் இருந்தாலும்
'அம்மா' என்றுதான் கதவைத்
தட்டுகிறோம்..
*****
அம்மாக்களைப்பற்றி எழுதப்பட்ட
எல்லா கவிதைகளிலும் குறைந்தபட்சம்
இரண்டு சொட்டுக்கண்ணீர்
ஈரம் உலராமல்..!
*****
அகில உலக அம்மாக்களின் தேசிய முழக்கம்
இதுதான்...
'எம்புள்ள பசி தாங்காது..!'
*****

# POOR MOTHER... PROUD CHILDREN

SUMITRA DEVI cleaned the streets of Central Coal Field Limited township of Rajrappa, Jharkhand, for 30 years and none living the colony could have ever thought that her retirement would be so special that people would bow before her in respect on the last day of her service.

On her retirement, her colleagues and neighbours made some arrangements to bid her adieu. There was nothing special and it was quite like another fourth grade employee retiring, until the arrival of three cars that change the scene altogether.

The first car with blue beacon caught everybody's attention. It was the District Collector of Siwan, Bihar touched his mother Sumitra Devi's feet. Soon, the gentlemen who got down from other two cars followed the District Collector. Sumitra's elder son Virendra Kumar is a Railway Engineer, her second son Dhirendra Kumar is a Doctor and her third son Mahendra Kumar is now the District Collector of Siwan District in Bihar.

When all the three sons touched her feet, Sumitra started crying. The tears of happiness were enough to tell that she was quite happy while her superiors who had gathered there to felicitate her on her last day felt amazed.

'Sahab, for 30 years, I cleaned the streets of this colony, but my children are Sahabs like you' said the emotional Sumitra while introducing her sons to her superiors.

While Sumitra's colleagues felt proud of her and their association for such a strong woman working with them, her three sons also shared some secrets and how their mother made them successful in life.

"Our mother has sacrificed a lot for us. She never let us down and always encouraged us to study and study harder, so that one day we can be officers in any of the offices like this one. I am proud that she is my mother" Siwan's Collector, Mahender Kumar said.

Sumitra's sons also shared the secrets of their success and how their mother worked hard to give them a good education. They said that all three of them decided to do something good in their lives after seeing the mother's struggle.

Despite Sumitra Devi's sons becoming big officers in their respective fields, she didn't stop cleaning the streets of colony and left her job. Instead, she kept doing her work with utmost dedication and hard work.

"I didn't leave this job despite my sons being successful because it was this job which helped me to educate my children. How could I leave something which turned my dreams into reality" said Sumitra.

Hard work always pays.

Mahendra Kumar, District Collector of Siwan got very emotional while seeing her mother saying goodbye to her job which made him and his brother officers. Many people there was unaware of this fact. But they were very proud that their fourth grade colleague has achieved so much in life with this small job.

The District Collector gave an emotional message that was appreciated by all the people present there.

"No job is difficult in life. Everything becomes possible with honest hard work. My mother and us have seen tough times in our lives, yet she never let us feel broken or disheartened. I am proud that we all lived up to her hard-work and expectations" said the District Collector.

*******

# MOTHER'S HANDS

A young man want to apply for a management position in a big company.

He passed the first interview and the final decision fell to the company's director.

The director saw in the man's CV that his academic achievements were excellent.

From high school through to his post-graduate research, he always had top marks.

The director asked, "Did you win any scholarships in school?"

The man replied 'None', The director asked, 'Was it your father who paid for your tuition?'

The man answered, "My father passed away when I was one year old, it was my mother who paid my tuition."

The director asked, "Where did your mother work?"

The man answered, "She worked in a laundry"

The director requested the man to show his hands. The man showed a pair of hands that were smooth and perfect.

The director asked, "Did you even help your mother wash clothes?"

The man answered, "Never, my mother always wanted me to study. Besides, my mother can wash clothes faster than I can."

The director said, "I have a request. When you go home today, clean your

mother's hands, and then see me tomorrow morning."

The man felt that his chance of landing the job was good. When he went home, he asked his mother to let him wash her hands.

His mother found it strange, but decided to humour her son. She reached out her hands and he began to wash them.

As he did, he felt a tear run down his cheek.

It was the first time he had noticed that his mother's hands were so wrinkled and had so many bruises.

It was the first time he had noticed this pair of hands that had worked hard every day just so he could go to school.

The bruises on the mother's hands were the price she had to pay for his graduation, his academic excellence and his future.

The next morning, the man went to the director's office. The director noticed the tears in his eyes and asked : "Can you tell me what you learned yesterday at home?"

The man answered, "I learned appreciation. Without my mother, I would not be the success I am today. I have come to appreciate the importance of family."

The director said , "That is what I am looking for in a Manager I want to recruit a person who can appreciate the help of others. You're appointed."

The most important thing to teach your children is the appreciation of hard work and the necessity of sacrifice to get things done.

★ ★ ★

# மாமியாரும் ஒரு அம்மாதானே..!

பாட்டி விசாலத்தின் பெயரை முதியோர் இல்லத்தில் பதிவு செய்துவிட்டு வந்த பின்னும் மூன்று நாட்களாக அந்தத் தகவலை தாயிடம் சொல்லத் தயங்கினான் சதீஷ்'.

"ஏன் இப்படி பயந்து சாகறீங்க?" என்று எரிந்து விழுந்தாள் அவன் மனைவி சத்யா.

"இல்லை.. அம்மாவுக்கு இது பெரிய ஷாக்காய் இருக்கும்."

"இதப்பாருங்க.. மாமியாரைப் பார்த்துக்கலாம். அது என் டியூட்டி. ஆனா.. மாமியாரோட .. மாமியாரைப் பார்த்துக்கறதெல்லாம் டூ மச்.."

அவன் ஒன்றும் சொல்லாமல் மவுனமாய் இருந்தான்.

"அடுத்த வாரம் அனுப்பணும்னா இப்பவே சொன்னாத்தான் அவங்களுக்கு பேக் பண்ண டைம் கிடைக்கும். சைக்காலஜிக்கலா தயாராகவும் முடியும். கிழவி இப்ப கோயிலுக்கு போயிருக்கா.. அதனால, இப்பவே போய் உங்க அம்மாவிடம் சொல்றீங்க.. நீங்க."

மனைவியிடம் வழக்கம் போல் தலையசைத்தான் சதீஷ். தயக்கத்துடன் ஹாலில் புத்தகம் படித்துக்கொண்டிருந்த அம்மா முன் சோபாவில் உட்கார்ந்தான்.

புத்தகத்திலிருந்து பார்வையை எடுத்து மகனைப் பார்த்தாள் ஜானகி.

"அம்மா.. நான் பாட்டியின் பெயரை முதியோர் இல்லத்தில் பதிவு செஞ்சிருக்கேன். அட்வான்சும் கொடுத்துட்டேன்."

ஜானகியின் கையில் இருந்து புத்தகம் நழுவிக் கீழே விழுந்தது. அவள் அதிர்ச்சியுடன், "என்னடா சொல்ற?" என்றாள்.

தர்மசங்கடத்துடன் தங்கள் அறைக்கதவு அருகே நின்ற சத்யாவைப் பார்த்ததும் அவள், "தைரியமாய் பேசுங்கள்" என்று சைகை காண்பித்தாள்.

கீழே விழுந்த புத்தகத்தை மேஜை மீது வைத்து விட்டு அதைப்பார்த்த படியே சொன்னான் சதிஷ்.

"இவ்வளவு வருஷமாய் பாட்டியை நாம் பார்த்துகிட்டாச்சும்மா. இனிமேலும் பார்த்துக்கறது கஷ்டம்மா."

"பாட்டி நல்லாத்தானே இருக்காங்க அவங்கள பார்த்துக்கிறதில் கஷ்டம் என்னடா இருக்கு?"

அவன் பதில் சொல்லவில்லை. தன் கோபத்தை அப்படியே விழுங்கிக் கொண்டு சொன்னாள் ஜானகி.

"சதிஷ், என் சித்தி கொடுமைக்காரின்னு, உன்னை பிரசவிக்க அவங்க எங்க வீட்டுக்குக்கூட என்னை அனுப்பாம தானே பிரசவம் பார்த்தவங்கடா"

"அதுக்காகத்தான் அப்பா செத்தப்புறம் கூட அவங்களை வெளியே அனுப்பாம நீயே இத்தனை வருஷம் பார்த்துகிட்டியேம்மா.."

"உன்னோட பி.ஈ. படிப்புக்கு பீஸ் கட்ட தன்கிட்ட இருந்த கடைசி நகையைக்கூட வித்தவங்கடா அவங்க."

"அதுக்காகத்தான் மாசா மாசம் முதியோர் இல்லத்தில் ஆயிரத்து 500 ரூபாய் கட்ட ஒத்துக்கிட்டேன்மா"

"நாம இருக்கறப்போ ஒரு அனாதை மாதிரி அவங்களை ஏன்டா அங்க சேர்க்கணும்?"

"பாட்டிக்கு நாம மட்டும் இல்லையேம்மா.. அத்தை கூட இருக்கா இல்லையா? வேணும்னா, பெத்த பொண்ணு கூட கொஞ்ச நாள் இருக்கட்டுமே.."

"அவ அவங்களுக்கு ஒரு வேளை சோறு ஒழுங்கா போட மாட்டாடா"

"அது தெரிஞ்சுதான் முதியோர் இல்லத்தில் சேர்க்க நாங்க முடிவு செஞ்சோம்."

"பொறுமையாக இரு" என்று தனக்கு பல முறை சொல்லிக்கொண்டு மகனைக் கேட்டாள் ஜானகி..

"பாட்டியால உங்களுக்கு என்னடா தொந்தரவு? ஏன் அனுப்ப முடிவு செஞ்சிங்க?"

தங்கள் அறைக்கதவைப் பார்த்தான் சதிஷ். உள்ளே போயிருந்தாள் சத்யா.

வேறு வழியில்லாமல் உண்மையை அவன் சொன்னான்.

"பாட்டி இங்க இருக்கிறது சத்யாவுக்கு பிடிக்கலைம்மா.."

மகனை அருவெறுப்புடன் பார்த்தாள் ஜானகி. அவளுக்குள் ஏற்பட்ட பூகம்பம் அடங்க சிறிது நேரம்

பிடித்தது.
பின் உடைந்த குரலில் மகனிடம் சொன்னாள்.
"சதிஷ் நல்லா யோசிடா.. இது சரியில்லைடா.."
"நாங்க நல்லா யோசிச்சாச்சும்மா"
மவுனமாக கண்களை மூடி சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தாள் ஜானகி.
சிறு வயதிலேயே தாயை இழந்து, சித்தியிடம் பல கொடுமைகளை அனுபவித்த ஜானகி, தன் திருமணத்திற்குப் பிறகு மாமியார் விசாலத்திடம் ஒரு தாயையே பார்த்தாள். சூது, வாது தெரியாத, நேசிக்க மட்டுமே தெரிந்த விசாலமும் தன் மருமகளை மகளாகவே பாவித்தாள்.
ஜானகியின் நாத்தனார் கிரிஜா, தன் தாயைப்போல யதார்த்தமானவள் ஆக இருக்க வில்லை. அவள் ஜானகியைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் தன் தாயிடம் சொல்வதை பல முறை கேட்டிருக்கிறாள் ஜானகி.
அப்போதெல்லாம், "சும்மா வாய்க்கு வந்தபடி பேசாதேடி" என்று மகளை விசாலம் அடக்கினாளே தவிர, என்றுமே அது பற்றி அவள் மருமகளிடம் விசாரித்தது கூட கிடையாது. மகள், மருமகளின் பிரசவத்தை தான் ஒருத்தியே பார்த்துக்கொண்டாள்.
ஒரு விபத்தில் கணவன் அற்ப ஆயுசில் இறந்து போகும் வரை ஜானகியின் வாழ்வு சந்தோஷமாகவே இருந்தது. அண்ணனின் சாவிற்கு வந்த கிரிஜா, தன் தாயைத் தன்னுடன் அனுப்பி விடுவரோ என்று பயந்து பிணத்தை எடுத்த மறுகணம் அங்கிருந்து மாயமாகி விட்டாள்.
பெரிய சேமிப்போ, சொத்தோ இல்லாத அவர்கள் குடும்பத்திற்கு உதவ உறவினர்கள் யாரும் இருக்க வில்லை. நிராதரவாக நின்ற ஜானகிக்கு அவள் மன உறுதியும், அவளது ருசியான சமையலும் கை கொடுத்தன. அவள் ஒரு கல்லூரிக்கு அருகே மெஸ் ஒன்றை ஆரம்பித்தாள். மாமியாரும், மருமகளும் ஓடாய் உழைத்தனர்.
சில வருடங்களுக்குப் பிறகு விசாலத்தின் முதுமை அவளை உழைக்க ஒத்துழைக்க வில்லை. மாமியாரை உட்கார வைத்து ஜானகி ஒருத்தியே மெஸ்ஸை நடத்தினாள்.
"உனக்கு நானும் பாரமாய் இருக்கிறேன் ஜானகி" என்று புலம்பினாள் விசாலம்.
"சும்மா பாரம், கீரம்னு பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க அத்தை. என்னை பிறந்த வீட்டுக்குக் கூட அனுப்பாம நீங்களே பிரசவம் பார்த்தீங்க. அப்போ நீங்க என்னை பாரம்னு பார்த்தீங்களா?"
"ஒரு பிரசவத்தைப் பார்த்ததைப் பத்தி நீ இன்னும் பேசறே.. என் பொண்ணுக்கு மூணு பிரசவம் பார்த்தேன். பெத்து வளர்த்த தாயை இப்ப அவ எட்டிக்கூட பார்க்க மாட்டேங்கிறா.."
விசாலம் என்ன சொன்னாலும் ஜானகிக்கு மாமியார் ஒரு பாரமாய் தோன்றவில்லை. விசாலம் வெற்றிலை பாக்கு சாப்பிட்டுக் கொண்டும், பக்கத்து வீட்டு லட்சுமிப் பாட்டியிடம் பழங்கதைகள் பேசிக்கொண்டும் உட்கார்ந்திருக்க, சிரமம் சிறிதும் தோன்றாமல் கடுமையாய் உழைத்து குடும்பத்தை நடத்தினாள் ஜானகி.
சதிஷ் கல்லூரிக்குப் போகும் வரை அந்த மெஸ் வருமானம் அவர்களுக்குப் போதுமானதாகவே இருந்தது. அவன் இன்ஜினியரிங் சேர்ந்த பிறகு தான் பற்றாக்குறை ஏற்பட்டது. மாமியாரும் மருமகளும் தங்கள் நகைகளை எல்லாம் விற்று சதிஷைப் படிக்க வைத்தனர். அவன் பி.ஈ. முடித்து அவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்த போது, மெஸ்ஸை அவர்கள் மூடினர்.
பல ஆசிரியர்களும், மாணவர்களும் உண்மையாகவே வருத்தப்பட்டனர். அவ்வளவு ருசியான சமையல் வேறு எங்கும் அவர்களுக்கு கிடைக்க வில்லை என்று பின்பு ஜானகியை சந்திக்கும் போதெல்லாம் கூறினர்.
சதிஷிற்கு திருமணமாகும் வரை அவர்கள் குடும்பம் சுமூகமாகவே இருந்தது. அவன் மனைவி சத்யா ஒரு வங்கியில் வேலை பார்த்தாள். அவளுக்கு ஆரம்பத்தில் இருந்தே உரத்த குரலில், 'டி' போட்டுப் பேசும் விசாலத்தைப் பிடிக்க வில்லை. வீட்டுக்கு வந்த அவளது சிநேகிதகளின் எதிரிலும் அதே போலப் பேசியது அவளுக்கு பெருத்த அவமானமாக இருந்தது.

# இன்று நீங்கள் இல்லையே அம்மா..!

அம்மாவுக்கு இறுதி விடை கொடுத்து வீடு திரும்பியாச்சு!

பாசம், பரிவு. அன்பு என்று இளகிய மனமும், இரும்பு போன்ற மன உறுதி, வைராக்கியம், பிடிவாதம், தான் கொண்ட கொள்கையில் பிடிப்பு என்ற இறுக்கமும், கண் பார்த்தால் கை செய்யும் என்ற அளவில் எந்த ஒரு கைவினையையும் சுலபமாகக் கற்றுத்தேறும் ஆர்வமும் - ஓர் அபூர்வக் கலவை "அம்மா..!"

பொருளாதார வசதி குறைவாய் இருந்த காலகட்டங்களிலும், எப்போதும், வீட்டுக்கு எத்தனை விருந்தினர் வந்தாலும், அத்தனை பேருக்கும் சுவையான உணவு இருக்கும். பண்டிகை நாட்களிலோ குறையொன்றும் இல்லை. தீபாவளி என்றால் கர்சீப் முதல் சட்டை வரை எல்லாருக்கும் புதிதாக அடுக்கப்பட்டிருக்கும். 2 ஸ்வீட், 4 காரம், லேகியம் என்று அனைத்தும் வீட்டிலேயே தயாராகும். உழைப்புக்கு அஞ்சாத அம்மா!

தையல் கலையில் தேர்ச்சி பெற்று, ஒரு மாதர் சங்கக் கூட்டுறவு அமைப்பில் சேர்ந்து, ஸ்கூல் யூனி∴பார்ம் போன்ற ஆர்டர் எடுத்து, வீட்டில் தைத்துக் கொடுத்து அந்த சிறு வருமானத்தையும் வீட்டுப் பொருளாதாரத்திற்கு முட்டுக் கொடுத்து தன் நேரத்தை வீணாக்காத அம்மா!

அக்கம் பக்கத்து வீட்டு குழந்தைகளையும், எங்கள் நண்பர்களையும் தன் மக்களாகப் பாவித்து அன்பு காட்டும் மனம். ஒரு முறை பக்கத்து வீட்டு மூன்று வயது பெண் குழந்தை வீட்டிலிருந்த தூக்க மாத்திரைகளை மிட்டாயென்று எண்ணித் தின்றுவிட்டுத் துவண்டு தலை தொங்க, அத்தனை பேரும் செய்வதறியாது திகைத்த போது, போட்டது போட்டபடி விட்டு விட்டு, குழந்தையை அள்ளிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடி, அவள் உயிரை மீட்டு வந்த செயல் வீராங்கனை அம்மா!

எந்த ராஜா எந்தப் பட்டிணம் போனாலும், அப்பாவோடு சேர்ந்து காலை அலுவல்களுக்கிடையே லலிதா ஸஹஸ்ரநாமம் தினசரி பாராயணம் செய்யும் அம்மா! கோவிலின் மாத முக்கியத் திருவிழாக்களுக்கு வருடம் தவறாமல் அழைத்துச் செல்லும் அம்மா!

வீட்டுப் பொருளாதாரச் சிக்கல்களுக்கு நடுவே எங்கள் வாழ்க்கைத் தரத்தை

தூண்டுகோலாக இருக்கிறார். அவர்தான் அவளின் வழிகாட்டியாக, பாதுகாப்பாளராக, நண்பனாக மட்டுமில்லாமல் சிறந்த நலன் கருதியாகவும் இருந்து தனது அன்பையும் பாசத்தையும் அவளைச் சுற்றி ஏற்படுத்துகிறார்.

எனது ஒவ்வொரு பருவத்திலும் என் தந்தையின் பன்முகங்களையும் கண்டு நான் வளர்ந்ததால் அவர்தான் எனது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குக் காரணம் என்று நம்புகின்றேன். அதனால், என் வாழ்க்கையின் கடைசி நாளை என் அப்பாவிற்கு அர்ப்பணித்து அந்த 24 மணி நேரத்தையும் என் அன்பு அப்பாவுடன் கழிக்க விரும்புகிறேன்".

இந்த பதிலைத் தொடர்ந்து வந்தன பல கரகோஷங்கள். அந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளர் அவளது பதிலில் மெய்சிலிர்த்து விட்டார். அவர், "இத்தகைய பெருமைக்குரிய இந்த மாணவியின் அப்பா இங்கு இருந்தால் எழுந்து நிற்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

அந்தப் பெருமைக்குரிய தந்தை எழுந்து நின்றார். ஆயிரக்கணக்கான கண்கள் அவரையே நோக்கின. எல்லா வீடியோ கேமராக்களும் அவரை நோக்கித் திரும்பின. அங்கு அமர்ந்திருந்த பேராசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கண்களில் நீர் தளும்பியது. இதைக்கண்ட அவளது தந்தை தனது மகளின் உரையினால் மெய் சிலிர்த்து மிகவும் நெகிழ்ச்சி அடைந்து புளகாங்கிதம் அடைந்தார். அவர் இரு கரங்களையும் கூப்பி அந்த மக்கள் வெள்ளத்தின் கரகோஷங்களை பணிவுடன் ஏற்றுக் கொண்டார்.

கண்களிலிருந்து வழிந்த ஆனந்தக் கண்ணீரை அவரால் என்ன முயன்றும் அடக்க முடியவில்லை. அவரது வாழ்க்கையில் மிகச் சிறந்த பரிசினை தனது மகளின் மூலம் அன்று பெற்றதாகக் கருதினார்.

இது ஒரு மகள் தனது தந்தையின் மீது காட்டும் உண்மையான அன்பு, பாசம் மற்றும் அர்ப்பணிப்பாகும்.

★ ★ ★

# அம்மா என்றாலே தியாகம் தான்

அன்புள்ள அம்மா..!

எல்லா பெண்களையும் போலவே கல்யாண கனவில் களித்து குதூகலமாக ஆடம்பரமாக திருமணம் புரிந்து கொண்டேன். பின்னர்தான் தெரிந்தது, வாழ்க்கை, சினிமாவில் போடும் சுபத்திற்கு பின்பு தான் தொடங்குகிறதென்று.

வாழக்கையில் விரும்புவது விரும்பப்படுவது என்பதையும் தாண்டி நிறைய இருக்கிறது.. என்று தெரிய வருகிறது.

எத்தனை பொறுப்புகள்?

எத்தனை சுமைகள்?

எத்தனை எதிர்பார்ப்புகள்?

எத்தனை தியாகங்கள்?

எத்தனை ஏமாற்றங்கள்?

நினைத்த நேரத்தில் முழு தூக்கம், தூக்கம் கலைந்த நேரத்தில் எழுந்திருக்க முடியவில்லை. குடும்பத்தில் மற்றவர் விழிக்கும் முன் நான் விழித்து, என் வேலைகளை ஆரம்பிக்க வேண்டி இருக்கு..

உன்னோடு இருந்த நாட்களில் எனக்கென்று விருப்பமான உடைகளில் சிட்டாக பறந்து கொண்டிருந்தேனே..

இங்கே, அவர்கள் விரும்பிய உடையில் நான் வலம் வருவதையே விரும்புகின்றனர். இதோ என் தோழியைப் பார்த்து விட்டு வருகிறேன் என்று உன்னிடம் சொல்லிவிட்டுச் சென்றது போல் சொல்லிச் செல்ல இயலவில்லை.

என் தேவைகளை விட அடுத்தவர் தேவைகளை முன் வைத்தே நான் நடந்து கொள்ள வேண்டி இருக்கு. எனக்கு விருப்பமான டிவி நிகழ்ச்சியைக் கூட பார்க்க முடிவதில்லை.

சில நேரங்களில் எதற்கு இந்தத் திருமணம்? என்று அலுப்பாக இருக்கிறது. இந்தத் திருமணம் என் சுதந்திரத்தை அல்லவா பறித்து விட்டது. என் சுயத்தை அல்லவா சூறையாடி விட்டது.

உன்னிடம் இருந்த போதே மிக மகிழ்வாக இருந்தேனே..!

வருத்தத்தைத் தந்தது. கூடவே ஒரு யோசனையும் தோணுச்சு. அதுதான் இப்படி 15 வருடமா செய்து வர்றேன்.

தினமும் பூ வியாபாரம் முடிந்து வீட்டுக்கு கிளம்பும்போது தனியாக 4 மாலைகளை கடைக்கு வெளியே தொங்க விட்டுட்டு போவேன். ராத்திரி நேரத்தில் யாராவது இறந்து போயிட்டா மாலை வாங்குவதற்கு பூக்கடைகளை தேடறவங்க என் கடையில் தொங்கும் மாலைகளில் தேவையானதை எடுத்துப்போய் பிரேதத்துக்கு போடுவாங்க. ஆரம்பத்தில் இந்த விஷயம் தெரியாததால் காலையில் பார்க்கும்போது மாலைகள் அப்படியே இருக்கும். பிறகு பலருக்கும் இது தெரிஞ்சதால் இப்ப பெரும்பாலும் மாலைகள் இருக்காது. முகம் தெரியாத ஒரு மனிதரின் உடலுக்கு நாம கொடுத்த மாலையால் மரியாதை கிடைச்சதே என்ற திருப்தி அன்னிக்கு முழுக்க மனசில இருக்கும். ராத்திரி மாலையை எடுத்துட்டுப் போன சில பேர் காலையில் வந்து மாலைக்கு காசு கொடுப்பாங்க. வாங்க மறுத்துடுவேன். தொங்க விட்ட மாலைகளில் ஏதாவது மிச்சம் இருந்தா அதை மறுநாள் வியாபாரத்துக்கு வச்சுக்க மாட்டேன்.. முதல் காரியமாக அதை குப்பை தொட்டியில் தூக்கிப் போட்டுட்டு புதுசா கட்ட ஆரம்பிச்சுடுவேன்.

என்னோட ஆத்ம திருப்திக்காக இதை 15 வருஷமாக செஞ்சிக்கிட்டு வர்றேன். ஒரு மாலை விலை 50 ரூபாய் வீதம் 200 ரூபாய் வரை ஒரு நாளைக்கு செலவாகும்.

காசு பணமா சார் முக்கியம்? மாட-மாளிகையில் பிறந்தாலும் குடிசையில் பிறந்தாலும் இறப்புங்கறது, எல்லோருக்கும் பொதுவானது. வாழ்வில் கஷ்ட நஷ்டங்களை பார்த்து கண் மூடுற மனுஷனுக்கான மரியாதை இந்த மாலை. அதை முகம் தெரியாத யாருக்கோ என்னால் செய்ய முடியுது என்பதே எனக்கு ஆத்ம திருப்தி தர்ற விஷயம் என்கிறார் சிறு புன்னகையுடன் மனித நேய பூ வியாபாரி துரைப்பாண்டி.

பழகிய, முகம் தெரிந்தவர்களுக்கே உதவி செய்ய பர்ஸை திறக்காத மனிதர்களுக்கு மத்தியில், வருமானத்தைப் புறந்தள்ளி முகம் தெரியாத மனிதர்களின் மேல் அன்பை செலுத்தும் துரைப்பாண்டி மிகவும் பாராட்டத்தகுந்த மாமனிதர்தான்.

**"THEY ALONE LIVE WHO LIVE FOR OTHERS"**

*****

# அம்மா உன்னை நேசிக்கிறேன்..

இந்தப் பூவுலகில் எத்தனையோ உறவுகள் பேனப்பட்டாலும், நேசிக்கப் பட்டாலும் அதில் ஏதோ ஒரு ஆதாயம் நேசிப்பவருக்கும், நேசிக்கப்படுபவருக்கும் இயற்கையாகவே இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இந்த உலகில் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், உள்ளார்ந்த அன்பின் வெளிப்பாடாய் இருப்பது ஒரு தாய் தன் சேய் மீது காட்டும் அன்பு.

இன்று இந்த அன்பிற்காக ஏங்கும் பலரைப் பார்க்க முடிகின்ற இவ்வேளையில், இந்த அன்பு கிடைக்கப்பெற்றும் நம்மில் எத்தனை பேர் நமது தாயை நேசித்து இருக்கிறோம்..? ஆங்கிலத்தில் ஒரு தத்துவம் உண்டு Father is a Faith but Mother is a Fact அதாவது தந்தை என்பது ஒரு நம்பிக்கை அடிப்படையிலான விஷயம், ஆனால், தாய் உண்மையின் சொரூபம்.

நமது தாய் சொன்னால்தான் தந்தை யார் என்பது நமக்கே தெரியும். ஆனால் தாய் என்பது ஒரு நிதர்சனமான உண்மை. தாய்க்கும், சேய்க்கும் இயற்கையாகவே ஒரு பிணைப்பு இருக்கிறது. இந்த வேளையில் நான் என் தாயை நினைத்துப் பார்க்கிறேன். அவள் எனக்காகப் பட்ட துன்பங்களும், ஏற்றுக் கொண்ட தியாகங்களும் என் விழியில் நிழலாடுகின்றது.

எத்தனை முறையோ நான் பள்ளிக்கு போக ஆரம்பித்த நாட்களில் கேள்விக் கனைகளால் துளைத்து எடுத்திருக்கிறேன். அப்போதெல்லாம் ஒவ்வொரு முறையும் சலிப்படையாமல் என் உச்சி முகர்ந்து முத்தமிட்டு எனக்கு விடையளிப்பாள். அப்போது அவளுடைய ஸ்பரிசம் எனக்கு விளங்க வில்லை.

கடையில் பார்க்கும் பொருட்கள் வேண்டும் என்று அங்கேயே கதறி அடம் பிடிப்பேன். தனக்கென்று எதுவும் சேர்த்து வைக்காத தாய் என் தந்தை அனுப்பும் சிறு தொகையில் எங்கள் குடும்பத்தையும் கவனித்து அதில் சேமிக்கும் சிறு தொகையை நான் கேட்டு அடம்பிடிக்கும் பொருளுக்காக செலவழிப்பாள், எங்கள் வீட்டின் பொருளாதார மேதை. அப்போதும் கூட கேட்ட பொருள் கிடைத்த மகிழ்ச்சிதான் என்னை சுற்றிக்கொண்டதே தவிர என் தாயின் உள்ளார்ந்த அன்பு விளங்கவில்லை.

மழைக்காலங்களில் என் தாயோடு பயணித்திருக்கிறேன். அந்த மழையின் கடுமையில் மாட்டிக்கொள்ளும் தருவாயில் நான் நனைந்து விடக்கூடாது என்பதற்காக அவளது புடவை முந்தானையால் எனக்குப் போர்த்தி, தனது குஞ்சுகளை அடைகாக்கும் கோழியைப் போல என்னை காத்து நின்று எனக்கு வர வேண்டிய ஜூரத்தையும், ஜலதோ‘த்தையும் அவள் ஏற்றுக் கொண்டு அவதிப்படுவாள். அப்போது கூட மழையில் தப்பித்த ஆனந்தம்தான் மேலோங்கியதே தவிர எனக்காக துன்பத்தை ஏற்ற அந்த கருணையின் வடிவம் தெரியவில்லை.

ஆண்டுகள் கழிந்தன. நானும் பெரியவனானேன். நண்பர்கள் வட்டாரமும் அதிகரித்தது. நாடோடிப்போல ஊர் சுற்றுவது. இரவில் ஊர் சுற்றி விட்டு நடு இரவில் தந்தையின் ஏசலுக்கு பயந்து கதவைத் தட்டும்போது எனக்காக கண்ணுறங்காமல் காத்திருந்து கதவைத் திறப்பாள்.

அதற்குத்தான் இப்போது கைமாறு செய்கிறேன். இது என்னுடைய முறையல்லவா?" என்று பதிலளித்தேன்.

அன்றைய நாளில் நாங்கள் இருவரும் எண்ணற்றவைகளை பகிர்ந்து கொண்டோம். சமீப காலங்களில் நடந்த முக்கிய நிகழ்வுகள், கடந்த காலத்தின் மிச்சங்கள் என நேரம் போனதே தெரியாமல் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். வேறு எங்கும் போக முடியாத வண்ணம், எங்களை விட்டு அகலாமல் அந்தத் தருணம் எங்கள் மனங்களின் அடியில் நிரந்தரமாகத் தங்கி விட்டது.

அம்மாவை அவர்கள் தங்கியிருந்த வீட்டில் விடும்போது, "இன்னோரு முறை நீ அழைத்தால் நிச்சயமாக வருவேன்" என்றாள். "கண்டிப்பாக" என்று உறுதியளித்து விட்டு, எனது வீட்டிற்கு திரும்பினேன்.

"எப்படி இருக்கிறார்கள் உங்கள் அம்மா?" இந்த அற்புதமான தருணத்தை எனக்கு உருவாக்கிக் கொடுத்த பெருமிதத்தோடு என் மனைவி கேட்டாள். "என் எதிர்பார்ப்புக்கும் மேலாக, மிகவும் மகோன்னதமாக இருந்தது" என்றேன்.

அதன்பிறகு சில தினங்களில் என் அம்மா இறந்து விட்டாள். எதிர்பாராத ஒரு தருணத்தில், அவளது மரணம் நிகழ்ந்து விட்டதால் ஒரு மகனாக நான் ஆற்ற வேண்டிய கடமைகளை கூட என்னால் செய்ய முடியவில்லை. என் அம்மா இறந்திருந்த ஓரிரு தினங்களில் எனக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அந்த கடிதத்தோடு. நானும் என் அம்மாவும் உணவருந்திய உணவு விடுதியிலிருந்து பெறப்பட்ட ரசீது ஒன்றும் இருந்தது.

அதில், "நான் இந்த ரசீதிற்கு முன்னதாகவே கட்டணம் செலுத்தி விட்டேன். இது உனக்கும், உனது மனைவிக்கும். இந்த கடிதம் உனக்கு கிடைக்கும்போது நான் இருக்கலாம், இல்லாமலும் போகலாம். எனினும் உன் மீதான என் பேரன்பு என்றுமே அழியாதது. நாம் இருவரும் உணவருந்திய அந்த மகிழ்ச்சிகரமான மாலைப்பொழுதை என்றென்றும் நான் மறக்க மாட்டேன். எனக்காக சில மணி நேரங்களை உன் பரபரப்பான பணி அட்டவணைக்கு இடையே ஒதுக்கியதற்காக உனக்கு கோடி நன்றிகள் மகனே..!"

அன்பின் உன்னத அலையை நான் அந்த நொடியில் உணர்ந்து கொண்டேன். அன்பான மகிழ்ச்சிகரமான நமது குடும்பத்தைத் தவிர உலகில் வேறெதுவும் முக்கியமானது இல்லை. நமது குடும்பத்துடன் சில மணி நேரங்கள் எவ்வித வேற்று சிந்தனைகளுமின்றி செலவழிப்பதன் மூலமாகவே நமது வாழ்க்கையை அர்த்தப்படுத்திக் கொள்ள முடியும்.

*****

# அம்மாவின் கைகள்

சில வருடங்களுக்கு முன்பு, வெலிங்டனில் உள்ள ராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டுக்குச் சென்று இருந்தேன். அவரது வரவேற்பறையில் இரண்டு கைகளின் புகைப்படம் ஒரு புனிதரின் கைகளாக இருக்கக்கூடும் என்று நினைத்து, அதைப்பற்றிக் கேட்கவே இல்லை. அவரோடு காரில் பயணம் செய்யும் போது, அதே போன்ற கைகளின் புகைப்படத்தை மறுபடியும் பார்த்தேன். ஆவல் மேலிட, அது யாருடைய கைகள் என்று கேட்டேன். "புகைப்படத்தைக் கையில் எடுத்துப் பாருங்கள்" எனச் சொன்னார்.

புகைப்படத்தை அருகில் பார்த்தபோது, அது வயதான மூதாட்டியின் கைகள் என்பதைக் கண்டுகொண்டேன். முதுமையின் ரேகை படிந்த நீண்ட விரல்கள். நகங்கள் சுத்தமாக வெட்டப்பட்டு இருந்தன. நரம்புகள் புடைத்துத் தெரிகின்றன. யாராக இருக்கும் என்று மனது ஏதேதோ துறவிகளை, ஞானிகளை நினைவுபடுத்திக் கொண்டே இருந்தது.

அவர் அந்தக் கைகளை ஒரு பெருமூச்சுடன் பார்த்து, ஆதங்கமான குரலில், "அது என் அம்மாவின் கைகள்" என்று சொன்னார். ஆச்சர்யமாக இருந்தது. எதற்காக அம்மாவின் கைகளை மட்டும் புகைப்படமாக வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டேன்.

இந்த கைகள்தான் என்னை வளர்த்தன. என் நினைவில் எப்போதுமே அம்மாவின் கைகள்தான் இருக்கின்றன. அம்மாவின் முகத்தைவிட, அந்தக் கைகளைக் காணும் போது தான் நான் அதிகம் நெகிழ்ந்துபோகின்றேன். அம்மா இறப்பதற்கு சில மணி நேரம்

தொடர்ச்சி - 2 ▶

முன்பாக இந்த புகைப்படத்தை எடுத்தேன். இந்த கைகள் இப்போது இல்லை. ஆனால், இந்த கைகளால் வளர்க்கப்பட்டவன் உங்கள் அருகில் உட்கார்ந்திருக்கிறேன்.

என் அம்மா எனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து ஓய்வு எடுத்ததே இல்லை. அப்பா 32 வயதில் இறந்து போனார். அம்மாதான் எங்களை வளர்த்தார். நாங்கள் மூன்று பிள்ளைகள். அம்மா படிக்காதவர். ஒரு வீட்டில் பணிப் பெண்ணாக வேலைக்குச் சேர்ந்தார். பகல் முழுவதும் அவர்கள் வீட்டினைச் சுத்தம் செய்வது, பாத்திரம் கழுவுவது, துணி துவைப்பது, நாய்களைப் பராமரிப்பது போன்ற வேலைகள். மாலையில் இன்னும் இரண்டு வீடுகள். அங்கும் அம்மாவின் கைகள் விளக்கிச் சுத்தம் செய்து இருக்கும் என்று நினைத்துப்பார்க்கவே மனது கஷ்டமாக இருக்கிறது.

இரவு வீடு திரும்பிய பிறகு, சமைத்து எங்களைச் சாப்பிடவைத்து உறங்கச் செய்துவிட்டு அதன் பின்னும் அம்மா இருட்டிலேயே கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொண்டு இருப்பார்கள். சமையல் அறையில்தான் உறக்கம். அப்போதும் கைகள் அசைந்தபடியே தான் இருக்கும். எங்கள் மூவரையும் பள்ளிக்கூடம் அழைத்துப் போகையில் யார் அம்மாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு நடப்பது என்பதில் ஒரு போட்டியே இருக்கும்.

அந்தக் கைகளைப் பிடித்துக்கொள்வதில் அப்படி ஒரு நெருக்கம், நம்பிக்கை கிடைக்கும். அதுபோலவே நாங்கள் உடல் நலம் இல்லாத நாட்களில் அம்மாவின் கைகள் மாறி மாறி எங்கள் நெற்றியைத் தடவியபடியே இருக்கும். அம்மா நிதானமாகச் சாப்பிட்டு நான் பார்த்ததே இல்லை. தனது சகல சிரமங்களையும் அம்மா தன்

தொடர்ச்சி - 3

கைகள் வழியே முறியடித்து எங்களை வளர்த்தபடியே இருந்தார். வேலை செய்யும் அந்த வீட்டில் அம்மா ஒருநாள் ஊறுகாய் ஜாடியை உடைத்துவிட்டார் என்று அடி வாங்குவதைப் பார்த்தேன்.
அம்மாவின் கன்னத்தில் வீட்டுகாரரின் மனைவி மாறி மாறி அறைந்துகொண்டு இருந்தார். அம்மா அழவே இல்லை. ஆனால், நாங்கள் பார்த்துக்கொண்டு இருப்பதைத் தாங்க முடியாமல், விடுவிடுவென எங்களை இழுத்துக்கொண்டு அந்த வீட்டில் இருந்து வெளியேறினார், வழியில் பேசவே இல்லை. அம்மாவை எந்தக் கைகளும் ஆறுதல்படுத்தவோ, அணைத்துக்கொள்ளவோ இல்லை. அவருக்கு கடவுள் நம்பிக்கைக்கூட அதிகம் என்று தோன்றவில்லை. வீட்டில் சாமி கும்பிடவோ, கோவிலுக்குப்போய் வழிபடவோ, அதிக ஈடுபாடு காட்டியதே இல்லை. வேலை... வேலை.... அது மட்டுமே தன் பிள்ளைகளை முன்னேற்றும் என்று அலுப்பின்றி இயங்கிக்கொண்டு இருந்தார்.

சிறு வயதில் அந்தக் கைகளின் முக்கியத்துவத்தை நான் புரிந்துகொள்ளவே இல்லை. ஆசையாகச் சமைத்துத் தந்த உணவைப் பிடிக்கவில்லை என்று தூக்கி வீசி இருக்கிறேன். கஷ்டப்பட்டுப் பள்ளியில் இடம் வாங்கித் தந்தபோது படிக்கப் பிடிக்கவில்லை என்று போகாமல் இருந்திருக்கிறேன்.
மற்ற சிறுவர்களைப்போல சைக்கிள் வாங்கித் தர மாட்டேன் என்கிறாள் என்று வசைபாடி இருக்கிறேன். அம்மா எதற்கும் கோபித்துக்கொண்டதே இல்லை. அம்மா கஷ்டப்படுகிறாள் என்று தெரிந்தபோதும் யார் அவளை இப்படிக் கஷ்டப்படச் சொன்னது என்று தான் அந்த நாளில் தோன்றியது.

தொடர்ச்சி -4 ▶

கல்லூரி வயதில் நண்பர்களோடு சேர்ந்து சுற்றவும் புதுப்புது ஆடைகள் வாங்கவும் எத்தனையோ பொய்கள் சொல்லி இருக்கிறேன். என் தம்பியும் தங்கையும்கூட இப்படித்தான் செய்திருக்கிறார்கள். ஆனால், அம்மா அதற்காக எவரையும் கோபித்துக்கொள்ளவே இல்லை. என் கல்லூரி இறுதி ஆண்டில் மஞ்சள் காமாலை வந்து, நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் அம்மா. அப்போதுதான் அவர் எங்களை எவ்வளவு அக்கறையோடு, ஆதரவோடு காப்பாற்றி வந்திருக்கிறார் என்று புரிந்தது.

அதன் பிறகு, என்னைத் திருத்திக்கொண்டு தீவிரமாகப் படிக்கத் துவங்கி ராணுவத்தில் வேலைக்குச் சேர்ந்து கடுமையாக உழைத்துப் பதவி உயர்வு பெற்றேன். அம்மாவை என்னுடனேயே வைத்துக்கொண்டேன். நான் சாம்பாதிக்கத் துவங்கிய பின், அம்மா ஒரு போதும் எதையும் கேட்டதே இல்லை. நானாக அவருக்கு எதையாவது வாங்கி தர வேண்டும் என்று நினைத்து, தங்க வளையல் வாங்கித் தருகிறேன் என்று அழைத்துப் போனேன்.

முதிய வயதில் அம்மா மிகுந்த கூச்சத்துடன், எனக்கு ஒரு வாட்ச் வேண்டும். சின்ன வயதில் வாட்ச் கட்டிக்கொண்டு வேலைக்குப் போக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் அது நடக்கவே இல்லை. அதன் பிறகு, எனக்குள் இருந்த கடிகாரம் ஓடு... ஓடு.... என்று என்னை விரட்டத் துவங்கியது. அலாரம் இல்லாமலேயே எழுந்து கொள்ளப் பழகிவிட்டேன். இப்போது வயதாகிவிட்டது. சில நாட்கள் என்னை அறியாமல் ஆறு மணி வரை உறங்கிவிடுகிறேன். இரவு உணவை ஏழு மணிக்கே சாப்பிட்டுவிடுகிறேன். ஒரு வாட்ச் வாங்கி தருவாயா? என்று கேட்டார்.

தொடர்ச்சி - 5

அம்மா விரும்பியபடி ஒரு வாட்ச் வாங்கித் தந்தேன். ஒரு பள்ளிச் சிறுமியைப்போல் ஆசை ஆசையாக அம்மா எல்லோரிடமும் காட்டினாள். அதை அணிந்துகொள்வதில் அம்மா காட்டிய ஆர்வம் என்னை நெகிழ்வூட்டியது. அதன் பிறகு அம்மா, நான் திருமணம் செய்து டெல்லி, பெங்களூரு என்று வேலையாக அலைந்தபோது கூடவே இருந்தார். டெல்லியில் இருக்கும்போது நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். நான் கூடவே இருந்தேன். அப்போது ஒருநாள் கேட்டேன் : "நாங்கள் ஏமாற்றிய போது எல்லாம் ஏன் அம்மா எங்களை ஒரு வார்த்தைகூடத் திட்டவே இல்லை?"

அம்மா, "அதற்காக நான் எவ்வளவு அழுதிருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. ஆனால், அன்று நான் கோபப்பட்டு இருந்தால் என்பிள்ளைகள் என்னைவிட்டுப் போயிருப்பார்கள்" என்று சொல்லி, என் கையை தன்னுடன் சேர்த்து வைத்துக்கொண்டார்.


அப்போதுதான் அந்த முதிய கைகளைப் பார்த்தேன். அவை எவ்வளவு உழைத்திருக்கின்றன. எவ்வளவு தூய்மைப்படுத்தி இருக்கின்றன. எவ்வளவு அன்பைப் பகிர்ந்து தந்திருக்கிறது. அதை ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. எனது கேமராவை எடுத்து வந்து, புகைப்படம் எடுத்துக்கொண்டேன்.

இன்று அம்மா என்னோடு இல்லை. ஆனால், இந்தக் கைகள் என்னை வழி நடத்துகின்றன. ஒவ்வொரு நாளும் நான் எப்படி வளர்க்கப்பட்டேன் என்பதை இந்தக் கைகள் நினைவுபடுத்துகின்றன. இதை வணங்குவதைத் தவிர, வேறு நான் என்ன செய்து விட முடியும்? என்றார்.

தொடர்ச்சி - 6

ராணுவ அதிகாரியினுடைய முகம் தெரியாத அந்தத் தாயின் கைகளை நானும் தொட்டு வணங்கினேன். அந்த கைகள் யாரோ ஒருவரின் தாயின் கைகள் மட்டும் இல்லை. உலகெங்கும் உழைத்து ஓய்ந்து போன தாயின் கைகள் யாவும் ஒன்று போலத்தான் இருக்கின்றன. அவை எதையும் யாசிக்கவில்லை. அணைத்துக்கொள்ளவும், ஆதரவு தரவும், அன்பு காட்டவும் நீளுகின்றன. அதை நாம் புறக்கணித்துப் போயிருக்கிறோம். அலட்சியமாகத் தவிர்த்து இருக்கிறோம்.

இலக்கு இல்லாத எனது பயணத்தில் யார் யார் வீடுகளிலோ தங்கியிருக்கிறேன். சாப்பிட்டு இருக்கிறேன். எனது உடைகளைத் துவைத்து வாங்கி அணிந்து இருக்கிறேன். அந்த கைகளுக்கு நான் என்ன நன்றி செய்து இருக்கிறேன். ஒரு நிமிடம் என் மனம் அத்தனை கைகளையும் வணங்கி, தீராத நன்றி சொன்னது.



கை விரல்களுக்கு இடையில் இடைவெளி இருப்பது இன்னொரு கைகள் நம்மோடு சேர்ந்துகொள்ளத்தான் என்று எங்கோ படித்தேன். அதை நிறைய நேரங்களில் நாம் உணர்வதே இல்லை. நம் மீது அன்பு காட்டும் கைகளுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்?

*முடிவு நம்மிடம் தானே!*